**CC. No. 2/2025 PW 3 06.10.2025**

சாட்சியின் பெயர் – ராஜா, த/பெ. கிருஷ்ணதாஸ்

குற்றப்பல்வகை மனு எண். 241/2025 ல் 19.09.2025 அன்று ஏற்பட்ட உத்தரவின் படி சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு ஆஜரானார். சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**<u>1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன். சம்பவ சமயத்தில் நான் என்ன பணியில் இருந்தேன் என்றால் பந்தநல்லூர் கோவிலில் தலைமை எழுத்தராக பணிபுரிந்து வந்தேன். எனக்கு கோவிலில் அலுவலகம் உள்ளது என்றால் சரிதான். அலுவலகமானது தனியாருடையதா அல்லது அரசினுடையதா என்றால் இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள அலுவலகம் ஆகும். எங்கள் அலுவலகத்தில் வருகை பதிவேடு உண்டு என்றால் சரிதான். 31.10.2012 அன்று நான் எனது அலுவலகத்திற்கு சென்றேன் என்றால் காலை 10 மணிக்கு சென்றேன். நான் வருகை பதிவேட்டில் அன்று எத்தனை மணிக்கு கையொப்பம் இட்டேன் என்றால் காலை 10 மணியில் கையொப்பமிட்டேன். வருகைப்பதிவேட்டில் கையொப்பம் இட்டு எனது அலுவகலத்தில் இருந்தேனா என்றால் ஆமாம். கோதண்டராமர் சுவாமி கோவிலில் சிலைகள் காணாமல் போனது குறித்து எனக்கு யார் தகவல் தெரிவித்தது என்றால் திருக்கோவிலின் பட்டாட்சாரியார் சேகர் 31.10.2012 அன்று காலை 11 மணியளவில் எனக்கு தகவல் தெரிவித்தார். பட்டாச்சாரியார் தகவல் தெரிவிக்கும் போது நான் அலுவலகத்தில் இருந்தேனா என்றால் அலுவலகத்தில் தான் இருந்தேன். தகவல் கிடைத்த பிறகு நான் சம்பவ இடத்திற்கு சென்றேனா என்றால் செயல் அலுவலகரிடம் தகவல் தெரிவித்து விட்டு நான் சம்பவ இடத்திற்கு சென்றேன். கோவில் பட்டாட்டாச்சாரியார் எனக்கு எவ்வாறு தகவல்

தெரிவித்தார் என்றால் எனது அலைபேசிக்கு தகவல் தெரிவித்தார். சம்பவ இடத்திற்கு செல்வதற்கு செயல் அலுவலரிடம் அனுமதி கடிதம் பெற்றேனா என்றால் செயல் அலுவலரிடம் தகவல் தெரிவித்தவுடன் அவர் சம்பவ இடத்திற்கு செல்லுமாறு கூறினார். அனுமதி கடிதம் எதுவும் பெறவில்லை. நான் வருகை பதிவேட்டில் கையொப்பம் இட்ட பிறகு சம்பவ இடத்திற்கு சென்றதற்கான ஆதாரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அவ்வாறான ஆதாரத்தை என்னிடம் கேட்காததால் நான் தாக்கல் செய்யவில்லை. நான் சம்பவ இடத்திற்கு சென்ற பிறகு எந்தெந்த அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு வந்திருந்தார்கள் என்றால் கோவிலின் செயல் அலுவலர் மட்டும் நான் சென்ற பிறகு வந்தார். செயல் அலுவலரின் பெயர் என்னவென்றால் ராமசந்திரன். சம்பவ இடத்திற்கு நான் மட்டும் சென்றேனா என்றால் என்னுடன் கோவிலின் பணியாளர் சரவணன் என்பவர் உடன் வந்தார். என்னுடைய அலுவலகத்திற்கும் சம்பவ இடத்திற்கும் இடையே உள்ள தூரம் எவ்வளவு என்றால் சுமார் 5 கி.மீ. இருக்கும். நான் சம்பவ இடத்திற்கு செல்வதற்கு முன்பு அங்கு யார் யார் இருந்தார்கள் என்றால் கோதண்டராமசுவாமி கோவிலின் பட்டாட்டாச்சாரியார் சேகர் மற்றும் பணிபெண் சரோஜா ஆகியோர் இருந்தனர் மற்றும் ஊர்காரர்களும் இருந்தார்கள். நான் சம்பவ இடத்திற்கு சென்ற பிறகு செயல் அலுவலர் வந்தாரா என்றால் ஆமாம். சம்பவ இடத்தை யார் யார் பார்வையிட்டார்கள் என்றால் கோவிலின் செயல் அலுவலர், நானும், பட்டாட்டாச்சாரியார் சேகர், பணிபெண் சரோஜா ஆகியோர் பார்வையிட்டோம். மற்ற கோவிலின் ஊழியர்கள் 4, 5 பேர் மற்றும் தெருவாசிகள் 5 பேர் மற்றும் ஊராட்சி மன்ற தலைவர் மற்றும் ஊர்க்காரர்கள் உட்பட 50 பேர் உள்சன்னதிக்கு முன்பு நின்று பார்த்தார்கள். ஊர்காரர்கள் யாரும் சம்பவ இடத்தை பார்க்கவில்லையா என்றால் ஊராட்சி மன்ற தலைவர் மட்டும் உள்ளே வந்து பார்த்தார். நாங்கள் சென்று பார்த்த

போது கதவில் பூட்டு இருந்ததா என்றால் இல்லை. நான் சம்பவ இடத்திற்கு சென்ற போது அங்கிருந்த ஊழியர்களை விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. செயல் அலுவலர் தான் விசாரித்தார். நானும், என்னுடன் வந்த சரவணனும் சும்மா சம்பவ இடத்தை பார்த்தோமா என்றால் செயல்அலுவலருடன் இருந்து பார்த்தோம். செயல் அலுவலர் யார்யாரை விசாரித்தார் என்றால் பட்டாட்டாச்சாரியாரையும், பணி பெண்ணையும் விசாரித்தார். பட்டாட்டாச்சாரியார் மற்றும் பணிபெண்ணிடம் எழுத்து மூலமாக செயல் அலுவலர் புகார் பெற்றாரா என்றால் பட்டாட்டாச்சாரியார் மட்டும் புகார் கொடுத்தார். செயல் அலுவலர் பட்டாட்டாச்சாரியாரிடம் புகார் மனு கேட்டாரா என்றால் பட்டாட்டாச்சாரியாரே புகார் மனுவை செயல் அலுவலரிடம் எழுதி கொடுத்தார். பட்டாட்டாச்சாரியார் எந்த தேதியில் புகார் மனுவை செயல் அலுவலரிடம் கொடுத்தார் என்றால் 01.11.2012 அன்று கொடுத்தார். எத்தனை மணிக்கு பட்டாட்டாச்சாரியார் செயல் அலுவலரிடம் புகார் கொடுத்தார் என்றால் நேரம் ஞாபகம் இல்லை. நான் சம்பவஇடத்திற்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் காலை 11 மணியில் இருந்து 11.30 மணிக்குள் சென்றேன். சம்பவத்தை பற்றி எனது உயர் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தோமா என்றால் செயல் அலுவலர் தகவல் தெரிவித்தார். எவ்வாறு தகவல் தெரிவித்தார் என்றால் அலைபேசி மூலமாகவும், கடிதம் வாயிலாகவும் தகவல் தெரிவித்தார். செயல் அலுவலர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தது எனக்கு தெரியும் என்றால் தெரியும். என்னிடம் சொல்லிவிட்டு செயல் அலுவலர் புகார் கொடுக்க சென்றாரா என்றால் செயல் அலுவலர் புகார் அளிக்க சென்றது தெரியும். எத்தனை மணிக்கு செயல் அலுவலர் காவல் நிலையத்திற்கு புகார் அளிக்க சென்றார் என்றால் 01.11.2012 அன்று சென்றார். சம்பவம் நடந்தது 30.10.2012 என்றால் 31.10.2012 அன்று பார்த்த போது சிலைகள் திருடுபோனது தெரியும்.

எப்போது சிலைகள் திருடப்பட்டன என்று தெரியவில்லை. காவல் நிலையத்திற்கும் சம்பவ கோவிலுக்கும் இடையே உள்ள தூரம் 5 கி.மீ என்றால் சரிதான். ஆனால் காவல் நிலையத்தில் புகார் மனு 01.11.2012 அன்று கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். காவல் நிலைய்தில புகார் கொடுத்த பிறகு ஆய்வாளர் எத்தனை மணிக்கு சம்பவஇடத்திற்கு வந்தார் என்றால் உடனடியாக வந்தார். காவல் ஆய்வாளர்ந வந்த போது நான் சமபவஇடத்தில் இருந்தேனா என்றால் ஞாபகம் இல்லை. காவல் ஆய்வாளர் சம்பவ இடத்திற்கு வந்து பார்வையிட்டு விசாரணை செய்து பார்வை மகசர் தயார் செய்த விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். கைரேகை நிபுணரை அழைத்து தடய பரிசோதனை செய்யப்பட்டதா என்றால் அது பற்றி தெரியவில்லை. பார்வை மகசரில் யார் கையொப்பமிட்டார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். காணாமல் போன சிலைகள் கிடைத்து விட்டததாக எனக்கு யார் தகவல் தெரிவித்தார்கள் என்றால் செயல் அலுவலர் தெரிவித்தார். களவு போன சிலைகளை அடையாளம் காட்ட என்னை காவல் ஆய்வாளர் அழைக்கவில்லை என்றால் சரிதான். சிலைகளை அடையாளம் காட்டுவதற்காக நான் காவல் நிலையம் சென்றேனா என்றால் இல்லை. காவல் ஆய்வாளர் என்னை எப்போது விசாரித்தார் என்றால் பந்தநல்லூர் காவல் நிலையத்தில் 01.11.2012 அன்று விசாரித்தார். நேரம் ஞாபகம் இல்லை. களவு போன ராமர் சிலை எடை எவ்வளவு என்றால் 102 கிலோ ஆகும். எதன் அடிப்படையில ராமர் சிலையின் எடை 102 கிலோ என்று சொல்கிறேன் என்றால் சிலை திருட்டு போன பிறகு இந்து சமய அறநிலைய துறைக்கு தொடர்ந்து தபால் அனுப்பும் போது 102 கிலோ எடை என்று எழுதப்பட்டிருந்ததாக ஞாபகம். இந்து சமய அறநிலைய துறைக்கு நாங்கள் அனுப்பிய தபால்களை காவல் ஆய்வாளர் கைப்பற்றினாரா என்றால் செயல் அலுவலரிடம் வாங்கினார். மேற்கண்ட தபால்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா

எ'எனறால் நான் தாக்கல் செய்யவில்லை. செயல் அலுவலர் தபால்களை தாக்கல் செய்துள்ளாரா என்று கேட்டு தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொள்ளவில்லை. காவல் துறை விசாரணையில் காணாமல் போன சிலைகள் வெண்கல சிலைகள் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் உற்சவ திருமேனிகள் என்று குறிப்பிட்டுள்ளேன். காவல் ஆய்வாளர் என்னை எத்தனை முறை விசாரித்தார் என்றால் ஒருமுறை விசாரித்தார். சம்பவ நடந்த பிறகு சம்பவ இடத்தை உயர் அதிகாரிகள் பார்வையிட்டார்களா என்றால் பார்வையிட்டார்கள். எந்த தேதியில் பார்வையிட்டார்கள் என்று எனக்கு தெரியாது. தேவேந்திரன் என்பவர் இரவு காவலராக கோவிலில் பணியாற்றி வருகிறார் என்றால் சரிதான். சம்பவத்தன்று மேற்கண்ட இரவு காவலர் பணிக்கு வரவில்லை என்றால் தெரியவில்லை. இரவு காவலர் முன்னாள் ராணுவ ஊழியர் என்பதால் அரசு கட்டுப்பாட்டின் கீழ்வருவார். இரவு காவலர் எங்கள் கட்டுப்பாட்டின் கீழ் இல்லை. சம்பவ இடத்திற்கு நான் செல்லும் போது சரவணன் என்னுடன் வந்தார் என்றால் சரிதான். எங்கள் அலுவலகத்தில் இருந்து சம்பந்தம், ராமதாஸ் ஆகியோர் என்னுடன் வரவில்லை என்றால் ஞாபகம் இல்லை. என்னுடன் சம்பந்தம், ராமதாஸ் ஆகியோர் வந்ததாக நான் நீதிமன்றத்தில் சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரிதான். எனது முதன்மை சாட்சியத்தில் சம்பந்தம், ராமதாஸ் ஆகியோர் என்னுடன் வந்ததாக நான் குறிப்பிட்டு இருக்கும் பட்சத்திலும் தற்போது சரவணன் உடன் வந்தார் என்று குறிப்பிட்டு இருக்கும் பட்சத்திலும் எது உண்மை என்றால் சரவணன் வந்தது உண்மை. நான் மாற்றி மாற்றி சாட்சியம் அளிப்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சிலைகளின் தொன்மை தன்மை அறிய காவல் ஆய்வாளர் எங்கும் சிலைகளை அனுப்பவில்லை என்றால் அதுபற்றி தெரியவில்லை. 31.10.2012 அன்று பட்டாச்சாரியார் எனக்கு சிலைகள் களவு போனது குறித்து தகவல் தெரிவிக்கவில்லை

என்றால் சரியல்ல. நான் அலுவலகத்தில் இருந்து சம்பவ இடத்திற்கு சென்றதற்கான ஆதாரங்களை தாக்கல் செய்யாததால் நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. சம்பவத்தை பற்றி பட்டாச்சாரியார் சேகர் 31.10.2012 அன்று எவ்வித கடிதமும் புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. பட்டாச்சாரியார் சேகரிடம் புகார் பெற்ற பிறகு காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்க செல்லவில்லை என்றால் சரியல்ல. புகார் மனு வாங்கிவிட்டு காவல்ஆய்வாளர் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. கோவில் ஊழியர்கள் செயல் அலுவலர் மற்றும் என் முன்னிலையில் காவல் ஆய்வாளர் சம்பவ இடத்தை பார்வையிடவில்லை என்றால் சரியல்ல. காவல் ஆய்வாளர் எல்லோரையும் அழைத்து வாக்குமூலம் பெற்றார் என்றால் தெரியவில்லை. என்னை அழைத்து விசாரித்தார். நான் இன்று நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்த சங்கதிகள் அனைத்தும் எதிரிகளுக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் செயல் அலுவலர், பட்டாச்சாரியார், இரவு காவலர் ஆகியோர்களை காப்பாற்ற நான் நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. காவல் துறையினர் கேட்டு கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

G. MANIKANDARAJA

Digitally signed by G. MANIKANDARAJA
Date: 2025.10.06 19:02:39 +0530